**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.**

## அரசு பணியாளர்களுக்கான மாநில கூடைப்பந்து போட்டிகள் நாளை துவங்குகிறது

**பத்திரிக்கை செய்தி**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி பிரிவின் சார்பில், 2016–2017 ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான அரசு ஊழியர்களுக்கான **கூடைப்பந்து (Basketball)** போட்டிகள் **28.03.2017 முதல் 30.03.2017 வரை** பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் உள்ள மின்னொளி கூடைப்பந்து மைதானத்தில் வைத்து **மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள்** தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த மாநில அளவிலான அரசு பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் நடத்தப்பட்ட தமிழகத்தின் 32 மாவட்டங்களிலிருந்தும், மாவட்ட அளவிலான போட்டிகளில் முதலிடம் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசு பணியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள். இப்போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக நாக்அவுட் முறையில் நடைபெறவுள்ளது. முதல் இரு இடங்களில் வெற்றிபெறும் வீரர், வீராங்கனைகளுக்கு வெற்றிக்கோப்பைகள், பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**இப்போட்டிகளுக்கான அணி மேலாளர்கள் கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள் தலைமையில், மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் வைத்து நடைபெறவுள்ளது.** அதனைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின்றன.

இப்போட்டிகளுக்கான விரிவான ஏற்பாடுகளை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்கள் தலைமையில் மாவட்ட கூடைப்பந்து செயலாளர் திரு. தங்க மாரி முத்து, SDAT கூடைப்பந்து பயிற்சியாளர் திரு. பழனி விக்னேஷ் மற்றும் விழாக்குழுவினர் செய்து வருகிறார்கள்.

மேலும், விவரங்களுக்கு 0462–2572632 என்ற அலுவலக எண்ணில் தொடர்புக் கொள்ளவும்.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்கள் தமது செய்தி குறிப்பில் தெரிவித்தார்கள்.

ஒம்/–

மாவட்ட விளையாட்டு மற்றும்<br>இளைஞர் நலன் அலுவலர்<br>திருநெல்வேலி.